## விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
### முன்னிலை: திரு. த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப.,

ந.க.ப்பி3/3859/2012 நாள்: 13.05.2014

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி IV 2006-07: 2012-13 விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வாளர்கள் - பணிநியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை மின்னஞ்சல் எண். 7027/பிஎஸ்டி-பி2/10, நாள் 20.11.2012.
2. விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கைகள் எண் ப்பி3/3859/2012 நாள் 28.11.2012.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் நேர்முக கடிதம் எண்.7027/பிஎஸ்பி பி2/10 நாள்: 14.06.2013

**உத்தரவு:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி IV தேர்வு 2006-07:2012-13 ன்கீழ் விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 தேர்வாளர்களின் பட்டியல் பார்வை 1-ல் காணும் கடிதத்தின் வாயிலாக வரப்பெற்றது. அவர்களுக்கு பார்வை 2-ல் காணும் நடவடிக்கைகளின்படி பணிநியமனம் வழங்கப்பட்டது.

அவ்வாறு சுருக்கெழுத்து தட்டச்சர்களாக பணிநியமனம் வழங்கப்பட்டவர்களில் திரு. எம்.இராமசாமி இனசுழற்சி வாரியாக காலிப்பணியிடமின்மையால் பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிலிருந்து 30.06.2013 பிற்பகல் முதல் பணிவிடுவிப்பு செய்யப்பட்டார். அவரைத்தவிர எஞ்சிய ஒருவர் பின்வரும் விபரப்படி பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

| வ.எண் | பணியாளர்களின் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | சுருக்கெழுத்து தட்டச்சராக பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|
| 1. | எம்.கோமதி, சுருக்கெழுத்து தட்டச்சர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(தணிக்கை) அலுவலகம், விருதுநகர் | 30.11.2012 மு.ப |

எனவே, தனியரின் பணியினை கீழே தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையுடன் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலையில் 30.11.2012 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

**"தனியரின் பணிநியமனம் மற்றும் பணிவரன்முறை முற்றிலும் தற்காலிகமானது. மேலும், இப்பணிவரன்முறையானது, தனியர் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி IV 2006-07:2012-13 தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவைப்பொறுத்தது".**

தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கண்ட நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ள விபரத்தினை பதிவு செய்து அதனை தெரிவிக்குமாறு ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(தணிக்கை) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13.5.14

**மாவட்ட ஆட்சியருக்காக,**
**விருதுநகர்.**

13/5/14

**பெறுநர்**
திருமதி. எம். கோமதி,
சுருக்கெழுத்து தட்டச்சர்,
ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(தணிக்கை) அலுவலகம்.
விருதுநகர்.
(அலுவலகத் தலைவர் மூலமாக)

**நகல்**

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை - 15.
3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(தணிக்கை) விருதுநகர்..
4. ப்பி3 முக்கிய ஆணைத்தொகுப்பு.

ந.க. அ1/147/2014 நாள் -.5.14

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) விருதுநகர் மாவட்டம்